# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 21 இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்

*[1986, ஆகஸ்ட் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**


*1986, ஆகஸ்ட் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 30 — தபாற் செலவு: சதம் 75

# 1986 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்

[1986 ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 66/85
1780

## 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**குறுக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது 1986 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

**1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, "பௌத்தத்தோடும், பாளி மொழியோடும் தொடர்பான ஏதேனுமொரு பாடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பௌத்தத்தோடு அல்லது பாளி கற்கைகளோடு தொடர்பான ஏதேனுமொரு பாடம்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**கடந்த காலத்தையும் உள்ளடக்கி நடைமுறை யிலிருத்தல்.**

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 180; (வெளிநாடு) ரூபா 200, ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.